**வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காப்புறுதி கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தின் சரியான தன்மை சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் மற்றும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகளை முறையாக பேணுவதை உறுதிப்படுத்துவதற்கு அந்நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் இனங்காணப்பட்டு முறையாக கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் நடைமுறையல்லா சொத்துகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலையான வைப்புகளின் பெறுமதி ரூபா 1,124,276 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெறவேண்டிய வட்டியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் ஆண்டுக்குரிய சொத்துக்கள் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| காப்புறுதி கம்பனிகளால் அனுப்பப்பட்ட நிதிகள் | 43,768,526 | காப்புறுதி கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட 01 சதவீத பங்களிப்பு தொடர்பான வருமான பட்டியல்கள் | காப்புறுதி கம்பனிகளால் அனுப்பப்படுகின்ற நிதிகளின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்கு தேவையான தகவல்களைக் கோரி காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை எந்த பதிலும் கிடைத்திருக்கவில்லை. | காப்புறுதி கம்பனிகளால் அனுப்பப்படுகின்ற நிதிகளின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பெறப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள். | | | | |
| (அ) | நிதிப் பிரமாணம் 110 | நட்டங்களை பதிவு செய்வதற்கு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. | நிதிப் பிரமாணம் 110 பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 454 (2) | மன்றம் மின் பொருத்துக்களிற்காக பொருளிருப்பு ஒன்றை பேணியிருக்கவில்லை. | பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. | நிதிப் பிரமாணம் 454(2) பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 891(1) | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல் உள்ளடங்கிய பிணைப் பதிவேடொன்று சொத்துக்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. | நிதிப் பிரமாணம் 891(1) பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) 11 | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகிறது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தொடர்புடைய திறைசேரி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பேணப்பட வேண்டும். |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவு | ஆளுகை சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அனைத்து உறுப்பினர்களாலும் பிரதிநிதித்துவப்படுத்தப் படாமல் 02 கூட்டங்கள் | காலக்கிரமத்தில் நடாத்தப்படும் கூட்டங்களில் அனைத்து உறுப்பினர்களும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்பதை அறிவிப்பதற்கு நடவடிக்கை | ஆளுகை சபைக் கூட்டங்கள் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | எடுக்கப்படும். | |
| (ஊ) | 8.8 ஆம் பிரிவு | மன்றம் நிதி அதிகாரக் கையளிப்பை ஆண்டின் தொடக்கத்தில் அங்கீகரிக்க வேண்டிய போதிலும் 2020 பெப்ரவரி 28 இல் நடைபெற்ற அமர்விலேயே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | 2020.02.06 இல் தலைவராக வந்த பின்னர் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் மீளாய்வாண்டிற்கான நிதி அதிகார கையளிப்பு தொடர்பான அங்கீகாரம் பெறப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதிகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஒக்தோபர் 31 ஆம் திகதிய பிஃடி 25(4) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் அதிகப்படியான நிதியை முதலீடு செய்வதற்கு முன்னர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் (திறைசேரி) அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் பெப்ரவரி 14 இல் மக்கள் வங்கியில் ரூபா 44 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் ரூபா 44 மில்லியன் தொகையை முதலீடு செய்வதற்கு சபை மற்றும் அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருந்தது. | உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதிகள் முதலீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 61,590,212 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 61,429,545 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 160,667 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது காப்புறுதி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பாக செலவினம் குறைவடைந்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 முக்கிய வருமன செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

(அ) மன்றத்திற்கான முக்கிய வருமான மூலமான காப்புறுதி கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் முன்னைய ஆண்டிற்கு எதிராக மீளாய்வாண்டின் போது ரூபா 1,134,312 ஆல் குறைவடைந்திருந்த அதே நேரம் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி வைப்புகளின் மீதான வட்டி வருமானம் ரூபா 4,080,486 ஆல் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செலவினமும் ரூபா 5,375,465 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) வங்கிகளின் நிலையான வைப்பு மற்றும் திறைசேரி வைப்புகளுக்கான வட்டி விகிதங்கள் முன்னைய ஆண்டுகளிற்கு எதிராக குறைவாக காணப்பட்டன. மோதி தப்பிச்செல்லும் விபத்துக்களுக்கான நட்டஈட்டு கொடுப்பனவு முன்னைய ஆண்டிற்கு எதிராக ரூபா 3,125,000 ஆல் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை நிறுவும் நோக்கில் தேசிய மன்றம் தொடங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அந்நிறுவனம் ஆணைக்குழுவொன்றாக நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டப்பூர்வ அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை, இதனால் முறையான பதவியணியினர் நியமனம் தடைபட்டுள்ளது. | பல பரிந்துரைகளுக்கு உட்பட்டு, வீதி பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை போக்குவரத்து பாதுகாப்பு ஆணைக்குழுவாக மாற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் 2021.06.15 இல் அமைச்சின் செயலாளரின் பங்குபற்றுதலுடன் கூடிய நிபுணர்கள் கூட்டத்தில் முன்னைய வரைவுச் சட்டம் திருத்தப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட வரைவை சட்ட வரைஞரிற்கு அனுப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய ஆணைக்குழுவை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட நான்கு காப்புறுதி கம்பனிகள் 01 சதவீத பங்களிப்பை செலுத்தியிருக்காத போதிலும் மன்றம் அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை அல்லது காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு ஊடாக மூன்றாம் தரப்பு காப்புறுதி உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை மன்றம் சரிபார்த்திருக்கவில்லை. | அது தொடர்பில் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து ஆவணச் சரிபார்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கடிதத்திற்கு பதில் கிடைத்ததும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகள் தொடர்பாக மன்றம் பின்தொடர் நடவடிக்கையை எடுக்க வேண்டும் அல்லது மூன்றாம் தரப்பு காப்புறுதி உடன்படிக்கைகள் காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு மூலம் கைச்சாத்திடப்படுகின்றதா என்பதை மன்றம் சரிபார்க்க வேண்டும். |
| (இ) | அனைத்து காப்புறுதி கம்பனிகளும் 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வீதி பாதுகாப்பு நிதியத்திற்கான பங்களிப்பை 02 சதவீதம் | வீதி பாதுகாப்பு நிதியத்திற்கான பங்களிப்பை 02 சதவீதமாக அதிகரிப்பதற்கான முன்மொழிவிற்கு வீதி | உரிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை திருத்தம் செய்து பங்களிப்பை அதிகரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வரை அதிகரிப்பதற்கு அவர்களது இணக்கத்தினை தெரிவித்திருந்த போதிலும் அதிகரித்த பங்களிப்பை அறவீடு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் அங்கீகாரம் மன்ற பத்திரம் மூலம் பெறப்பட்டிருந்தது. அனைத்து காப்புறுதி கம்பனிகளையும் ஒழுங்குபடுத்தும் பொறுப்புள்ள காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரம் 2021.04.30 இல் வழங்கப்பட்டிருந்தது. மேலும், பிரமாணங்களை விதிப்பது தொடர்பாக சட்ட வரைஞரிடம் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அடையாளம் தெரியாத வாகனங்களால் ஏற்படும் வீதி விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை செலுத்துவதற்கான திட்டத்தின் அறிவுறுத்தல் கையேட்டின் பிரகாரம் விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய நட்டஈடு தாமதமின்றி வழங்கப்பட வேண்டிய போதிலும் 2018 முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குள் பெறப்பட்ட 06 நட்டஈட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டத்திலிருந்து 02 வருடங்களும் 06 மாதங்களும் கடந்துள்ள போதிலும் அவை தொடர்பில் நட்டஈடுகளை செலுத்துவதற்கு மன்றம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | நட்டஈட்டை செலுத்துவதற்கான வினைத்திறனான முறைமையொன்று காலக்கிரமத்தில் அறிமுகப்படுத்தப்படும். | பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை செலுத்துவதில் வினைத்திறன் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2015, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் காயமடைந்த நபர்களிடமிருந்து பெறப்பட்ட 08 விண்ணப்பங்களுக்கு ஆதரவாக மீளாய்வாண்டின் போது ரூபா 775,000 கூட்டுமொத்தமான நட்டஈடு செலுத்தப்பட்டுள்ள போதிலும் விண்ணப்பங்கள் பெறப்பட்டதிலிருந்து 01 | நட்டஈட்டை செலுத்துவதற்கான வினைத்திறனான முறைமையொன்று காலக்கிரமத்தில் அறிமுகப்படுத்தப்படும். | பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை செலுத்துவதில் வினைத்திறன் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு மற்றும் 02 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரையிலான வீச்சிலான தாமதத்தின் பின்னர் நட்டஈடு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் காப்புறுதி கம்பனிகளிடமிருந்து ரூபா 43,768,526 தொகை பங்களிப்பாகப் பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,275,000 தொகை மாத்திரமே நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது, இது பங்களிப்பு பெறுவனவுகளில் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இலங்கையில் நிகழும் வீதி விபத்துக்களை பொறுத்தமட்டில் பொதுமக்களின் கவனக்குறைவு காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. | நட்டஈட்டு கொடுப்பனவு தொடர்பான அறிவிப்புக்களை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டஈடு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் முக்கிய நோக்கங்கள், வீதி விபத்துகளைக் குறைத்தல் மற்றும் மோதி தப்பிச்செல்லும் விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை செலுத்துதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. 05 வருட காலப்பகுதிக்குரிய தகவல்களின் பிரகாரம் 320 விபத்துக்கள் இடம்பெற்றுள்ள அதேநேரம் 261 விண்ணப்பங்கள் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாத 59 விபத்துக்கள் தொடர்பாக மன்றம் பின்தொடர் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பொலிஸின் மோட்டார் போக்குவரத்து பிரிவுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இவ் விடயம் மன்றத்தின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அறிவுறுத்தல்கள் பெறப்படும். | பொலிஸின் மோட்டார் போக்குவரத்து பிரிவு மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களை இனங்காண்பதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பரில் யப்பானில் இருந்து நன்கொடையாக பெறப்பட்ட சாரதி பயிற்சி உபகரணங்கள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,875,351 பெறுமதியான உபகரணங்களை பயன்படுத்தி சாரதி பயிற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அப் பயிற்சி 2019 யூன் 21 முதல் 2021 மார்ச் வரை நிறுத்தப்பட்டதன் காரணமாக அத்தகைய உபகரணங்கள் விளைவற்றிருந்தன. | மேலதிக நடவடிக்கை தொடர்பான அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. அறிவுறுத்தல்கள் கிடைத்ததும் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாடுகளை சரியாகக் இனங்கண்டு தற்போதுள்ள சொத்துக்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் வருடாந்த பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். எனினும் மன்றம் பொருட்கள், சேவைகள் மற்றும் நானாவித செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் தொடர்பாக மீளாய்வாண்டிற்கு ரூபா 49.28 மில்லியன் பெறுமதிக்கு திட்டங்களை தயாரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எந்த நடவடிக்கையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் 2020 திசெம்பர் 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டளவில் செயற்பாடுகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தால் பொருளிருப்பு | உரிய பதிவேடுகள் முறையாக பேணப்படுவதை | சொத்துக்களை கட்டுப்படுத்துவதில் |

| | | |
|---|---|---|
| முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் விடுவிக்கப்பட்ட பொருட்களை பதிவு செய்யாததால் மன்றத்திற்கு சொந்தமான பொருட்களில் பற்றாக்குறை காணப்பட்டது. | உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதுமான பயிற்சி பெற்ற பதவியணியினரிற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக போக்குவரத்து அமைச்சின் 05 உத்தியோகத்தர்கள், புகையிரத திணைக்களத்தின் 05 உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் ஒரு உத்தியோகத்தர் உள்ளடங்கிய 11 உத்தியோகத்தர்களுடன் மன்றம் தொழிற்பட்டிருந்தது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் பதவியணியினரிற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் பதவியணியினரிற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி சுற்றறிக்கைக்கு முரணாக முன்னைய 05 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் காலக்கிரமத்தில் பின்பற்றப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிப் பாதுகாப்பை முகாமை செய்வதற்கான இயலளவை வலுப்படுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இருபது செயற்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றை நிறைவேற்றுவதற்கான 49 நடவடிக்கைகளுடன் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன. அதிலிருந்து 14 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் | தொற்றுநோய் பரவல் காரணமாக எதிர்பார்த்தவாறு திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட முடியாதிருந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தன.

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 29 ஆம் திகதிய டிஎம்ஏ/2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நான்கு கூட்ட அமர்வுகள் நடத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றுநோய் காரணமாக முகாமைத்துவக் குழு கூட்டத்தின் ஒரு அமர்வு வெளியிடப்பட்டு கூட்டத்தின் ஒரு அமர்வு நடைபெற்றிருந்தது. கூட்டத்தின் 04 அமர்வுகளை நடாத்துவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மன்றத்தின் செயற்பாடுகளை எளிதாக்கும் வகையில் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட வேண்டும். |

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 5.2.4 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நிதியாண்டு தொடங்குவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீட்டிற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டிற்காக சபையின் அங்கீகாரம் 2020 பெப்ரவரி 28 இல் பெறப்பட்டிருந்தது. | 2020.02.06 இல் வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் தலைவர் பதவியில் நான் கடமைகளைப் பொறுப்பேற்றேன். தலைவராக வந்த பின்னர் நடைபெறும் கூட்டத்தின் முதலாவது அமர்வில் மீளாய்வாண்டின் பாதீட்டிற்காக அங்கீகாரம் பெறப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 02 செலவின விடயங்களின் கீழ் ரூபா 1,947,545 கூட்டுமொத்தமான செலவினங்கள் வழங்கப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகள் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கொரோனா தொற்று பரவல் காரணமாக பாதீட்டின் பிரகாரம் முகாமைத்துவ செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. குறித்த வேறுபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்குவதற்கான தேவைப்பாடுகளை சரியாகக் கண்டறிந்து பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பிடும் போது 04 சதவீதத்திலிருந்து 651 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | கொரோனா தொற்று பரவல் காரணமாக பாதீட்டின் பிரகாரம் முகாமைத்துவ செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. குறித்த வேறுபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்குவதற்கான தேவைப்பாடுகளை சரியாகக் கண்டறிந்து நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் என்பி/5பி/5டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்துடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பொறுத்தவரை, வீதி பாதுகாப்பு தொடர்பான 03 நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளன, மேலும் அவை தொடர்பான செயற்பாடுகளை உள்ளடக்கி மன்றத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு அதற்கிணங்க திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |